பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 27 செவ்வாய்க்கிழமை (11 - 01 - 2000) *VALAMPURI* ஒலி: 23

## களுத்துறை சிறைச்சாலையில்மோதல் சம்பவம்

# விசாரணைக் குழு நியமித்து அறிக்கை வழங்க உத்தரவு!

## தென்மராட்சியில் கிபீர் குண்டு வீச்சு

(தென்மராட்சி)

நேற்று இலங்கை விமானப் படை கிபிர் விமானங்கள் தென்மராட்சிப் பகுதியில் இரு குண்டுகளை வீசின,

இக் குண்டுகள் மறுவன் புலோ, தனங்களப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் இச் சம்பவத்தில் இடம் பெற்ற சேதவிபரம் எதுவும் தெரியவரவில்லை.

## தொல்லை தவிர்ப்புகுழு பணிப்பு

(கொழும்பு)

**களுத்துறை சிறைச்சாலையில் கடந்த இரண்டு தினங்களாக இடம் பெற்று வந்த மோதல் சம்பவங்கள் தொடர்பாக "தொல்லை தவிர்ப்புக்குழுவின் தலைவரும் சமய கலாச்சார அமைச்சருமான திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் நேற்று பாராளுமன்றத்து கட்டிடத்தில் கூட்டம் கூட்டப்பட்டது அக்கூட்டத்தில் இவ் விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.**

கடந்த இரு தினங்களாக களுத்துறை சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகளுக்கும் காவல்கடமையில் இருந்த சிறைக்காவலர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இரண்டு தமிழ் கைதிகள் கொல்லப் பட்டும் 40கைதிகள் காயம் அடைந்தும் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தொல்லை தவிர்ப்புக்குழுத் தலைவரும் சமயவிவகார அமைச்சருமான லஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்றது: இக்கூட்டத்தில்பட்டிவீரக்கோன் [பா.உ] இரா.சம்பந்தர் [பா.உ] ஆர்: லோகராஜன் நீதி அமைச்சின் செயலாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் கொட்டக தெனியா ஆகியோர் கலந்து கொண்டனர்

இக்கூட்டத்தில் களுத்துறை சிறைகளில் மோதல் சம்பத்தமாக ஆராய்ந்து. அறிக்கை சமர்ப்பீப்பதற்காக ஒரு குழு நியமிக்க வேண்டும் என்றும் அக்குழு பூரண விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொலை சந்தேகநபர் சாந்த பற்றிய தகவல் தரவும்

குமார் பொன்னம்பலம் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப் பட்டுவரும் சந்தேகநபர் சாந்த என்பவரைப் பற்றிய தகவல்கள் கிடைத்தால் 50 கிறகதிஸ் றோட்டில் உள்ள குற்றப் புலனாய்வு பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேக நபர் சாந்த 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வயதினர் என்றும் பொதுநிற மானவர் என்றும், 5' 5'' உயரம் கொண்டவர் என்றும், தகவல் அறிந்தவர்கள் 691500, 693123 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் பந்துல குணவர்த்தனா அறிவித்துள்ளார்.

## கொழும்பு குண்டு வெடிப்பு சம்பவம் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியம்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபை வளாகத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் முக்கிய சாட்சியங்களில் ஒருவரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ். என். எஸ் பெரேரா குண்டு வெடிப்பு தொடர்பாக நேற்று சாட்சியம் அளித்தார்,

கொழும்பு பிரதம நீதவான் ஜி. டி. குலதிலகா முன்னிலையில் நடைபெற்ற விசாரயின் போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.என் எஸ். பெரேரா தொடர்ந்து சாட்சிய மளிக்கையில்

ஜனாதிபதி மற்றும் முக்கிய அரசியல் வாதிகள் மீது புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை ஜெற்றி இராணுவம் கைது செய்த விஜயராசா எங்கே? ஜோசப் எம். பி கேள்வி

(மட்டுநகர்)

வாழைச்சேனை ஜெற்றி இராணுவ முகாம் இராணுவத்தினரால் கடந்த 03/ 01/ 2000 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அப் பகுதியைச் சேர்ந்த வினாசித் தம்பி விஜயராஜா என்ற இளைஞருக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை செய்யும்படி தொல்லைத் தவிர்ப்புக் குழுவின் தலைவரும் சமய கலாசார அமைச்சருமான திரு லக்ஷ்மன் ஜெயக்கொடியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக்குழுத் தலைவரும் எம். பியுமான ஜோசப்பரராஜசிங்கம் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமான தனது புகாரில் ஜோசப் எம்..பி மேலும் தெரிவித்துள்ளதாவது.

பிரஸ்தாப இளைஞர் சம்பவதினம் தனது உறவினர் இருவரை துவிச்சக்கர வண்டியில் ஏற்றிக்கொண்டு பாடசாலை சென்றுள்ளார். வாளைச்சேனை பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## சடலம் அடக்கம் செய்யப்பட்டது

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போதுமரணமான தமிழ் அரசியல் கைதியான ஜேசுதாசனின் சடலம் நேற்று முன்தினம் இரவு செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக வவுனியாவுக்கு எடுத்துவரப் பட்டு அவரது சகோதரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது ஜேசுதாசனின் சடலம்நேற்று பிற்பகல்இரண்டுமணியளவில் வேப்பங்குளம் கத்தோலிக்க மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது, அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் நலன் புரி நிலையத்தைச் சேர்ந்த மக்கள் மற்றும் புளொட், ரெலோ முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

## படகு விபத்தில் ஒருவர் பலியானார் அரிப்பு ஆற்றில் பரிதாபச் சம்பவம்

(மன்னார்)

வவுனியாவில் இருந்து மன்னார் ஊரல்தோட்டத்தில் உள்ளதனது மனைவியை பாக்கச் சென்ற போது ஏற்பட்ட படகு விபத்தில் சிக்கி அந்தோணிஜோசப் 42வயது என்பவர் பலியானார்.

இம்மாதம் 6ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது விபத்தில் பலியான அந்தோணிப்பிள்ளை யோசேப்பு என்பவர் ஊரல் தோட்டத்தில் உள்ள தனது மனைவியை பார்க்கச் சென்ற போது அரிப்புக்கும் ஊரல்தோட்டத்திற்கும் இடையில் உள்ள ஆற்றைக் கடக்க முற்பட்ட போது ஆற்றங்கரையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டு

(6ம் பக்கம் பார்க்க)

## கடமைநேரத்தில் தனியார்மருத்துவம் செய்த 96 மருத்துவர்கள்பிடிபட்டனர்

சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் திடீர்சோதனைப் பிரிவு கடந்த இருமாதங்களுக்குள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது கடமை நேரத்தில் தனிப்பட்ட முறையில் மருத்துவம் செய்த 96 மருத்துவர்கள் சிக்கியுள்ளனர்,

இவர்களில் விசேடமருத்துவர் 07பேரும் பல்மருத்துவர் 05பேரும், 57 மருத்துவர்களும் 12பதிவு செய்யப்பட்ட உதவி மருத்துவர்களும் மற்றும் மருத்துவ தொழில் நுட்ப பிரிவு அதிகாரிகளும் அடங்குவர்.

அரசாங்க சேவை ஆணைக்குழு இந்த மருத்துவர் சம்பந்தமான விசாரணைகளை நடத்தி சம்பள உயர்வு நிறுத்தம் இடமாற்றம் போன்ற தண்டனைகளை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிரத பாதை குண்டு வெடிப்பு

கொழும்பில் இருந்து சிலாபம் நோக்சி சென்று கொண்டிருந்தபுகை வண்டி புகையிரதப் பாதையில் வைக்கப்பட்ட குண்டு ஒன்று நேற்று இரவு 9.50 குக் வெடித்ததினால் கண்ணாடிகள் நொறுங்கி சிறிது சேதத்துக்குள்ளானது

இக்குண்டுவெடிப்புசம்பவம் நீர்கொழும்பு பெரிய முல்லை என்ற இடத்தில் இடம்பெற்றது

இக்குண்டு வெடிப்புகளின் போது எந்தவிதமான பாரிய சேதங்கள் ஏற்படவில்லை என ரயில்வே உதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஈ. பி. ஆர். எல். எவ். நாளை கூடுகிறது

ஈ.பி. ஆர். எல். எவ். இன் மத்திய குழு நாளை கொழும்பில் கூடவுள்ளது இக்கூட்டத்திற்கு முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள் தவிர்ந்த ஏனையவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ. பி. ஆர்.எல் எப். காங்கிரஸ் குழுவும் கூடவுள்ளது. ஈ.பி.ஆர.எல். எவ் கூட்டம் நடைபெற விருக்கும் இவ்வேளையில்முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இந்தியா சென்றுறுள்ளார்.

## முஸ்லீம் அகதிகள் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் தாக்கப்பட்டனர்

(ஏறாவூர்)

ஏறாவூர் மிச் நகர் கிராமத்திற்கு அருகிலுள்ள முஸ்லீம் அகதிக்ள் மீள் குடியேற்றப்பகுதிக்குள் அத்துமீறிச் சென்ற ஆயுதக்கும்பல் ஒன்று அங்கு அட்டகாசம் புரிந்துள்ளது என ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

ஞாயிறு இரவு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு வந்த கோஷ்டியினர் அகதிகளைத் தாக்கியதுடன்15 இற்கும்மேற்பட்ட கொட்டில்களை துவம்சம் செய்துள்ளனர்.

இந்த முஸ்லீம் அகதிகள் 1990 ஆம் ஆண்டில் மட்டக்

(6ம் பக்கம் பார்க்க)

### தேர்தல் வாக்குறுதிக்கமைய

# இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி ஓயாது உழைப்பார்

## - பிரதிப்பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வைக் காண்பேன் என்ற ஜனாதிபதியின் தேர்தல் வாக்குறுதியை அவர் நிச்சயம் நிறைவேற்றுவார். இதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற்கொள்வதற்கு மக்கள் தமது ஆதரவினை கடந்த தேர்தலின் போது தெரிவித்துள்ளனர். என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத் தரத்வத்தே தெரிவித்துள்ளார்:

அவர் மேலும் தெரிவிக்கையில். நாம் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக்கட்சியினருக்கு ஒரு போதும் அழைப்பு விடுவிக்கவில்லை. பயங்கரவாதத்தை ஒழித்து இனப்பிரச்சினைக்கு நியாயமானஒரு நிரந்தர தீர்வைக் காண்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு ஜனாதிபதி சந்திரிக்காகுமாரதுங்க ஐக்கிய தேசிய கட்சியினருக்கு வேண்டுகோள் விடுவித்திருந்தார். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சியினுள் புத்திஜீவிகள்இருந்தால்முன்வாருங்கள் என்று தானும் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இனி இருப்பது ஐ. தே. க. வின் நேரடிப் பங்களிப்புத் தான் ஆனால் அவர்களில் சிலர் நாம் தேசிய அரசாங்கம் அமைப்போம் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

நாட்டு நலனையும் மக்களின் நலனையும் கருத்திற் கொண்டு சமானத்தைக் கொண்டுவர ஐ. தே. க. தாமாகவே விரும்பி முன்வருமானால் அதற்கு பூரண ஆதரவு வழங்க நாம் தயாராக உள்ளோம்.

ஆனால் இந்த ஒத்துழைப்பு நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழங்கப்படும் ஒத்துழைப்பாக அமைய வேண்டும் என்றார்.

(க-14)

# தமிழ்ப் பெண்ணுக்கு சத்திரசிகிச்சை கட்டில் வசதி வழங்க மறுப்பு!

(கொழும்பு)

தமிழராகப் பிறந்த குற்றத்தினால் வைத்திய சாலையில் பாரபட்சமாக நடத்தப்பட்ட சம்பவம் அண்மையில் இரத்தினபுரி அரசினர் வைத்திய சாலையில் நிகழ்ந்துள்ளது.

தமிழ்ப் பெண் ஒருவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பின் அவருக்கு கட்டில் வசதிமறுக்கப்பட்டு நிலத்தில் படுக்க வைக்கப்பட்டுள்ளார்.

குண்டு வெடிப்பினால் சிங்கள மக்கள் கொல்லப்படுவதற்கு தமிழ் மக்களும் புலிகளுமே காரணம் எனவும் கூறியே கட்டில் வசதி தர அத்தாதி மறுத்துள்ளார்.

அத்துடன் தமிழர்களுக்கு சிகிச்சை தேவையில்லை எனவும் அப்படி சிகிச்சை வழங்கப்பட்டாலும் சொகுசான படுக்கை தேவை இல்லை என்றும் இனவாதரீதியில் பேசி இருக்கிறார்.

இதே வேளை பெரும்பான்மை இனத்தவருக்கு சிறிய நோய்களுக்கும் சொகுசான படுக்கை வசதிகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த விவகாரம் சூடுபிடித்து மருத்துவத் தாதிக்கும் இந்தப் பெண்ணின் உறவினர்களுக்கும் இடையே ஏற்பட்ட சர்ச்சை பொலிஸ் நிலையம் வரை செல்லும்என அவதானித்த மருத்துவ அதிகாரி அந்த தமிழ்ப் பெண் நோயாளிக்கு கட்டில் வசதியை வழங்கி சர்ச்சையை முடிவிற்கு கொண்டுவந்துள்ளார்.

(05)

## வீடியோ கசற் அனுப்பும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய இடங்களுக்கு வீடியோ கசற் அனுப்பி வைக்கும் பணி தற்காலிகமாக இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அனுமதிபெற்ற பின்னர் இலங்கை செஞ்சிலுவைச்சங்க பயணிகள் கப்பல் மூலம் இடம் பெற்று வந்த இப் பணி கடந்த சில வாரங்களாக கப்பல் சேவை சீராக இடம் பெறாமையிலே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவேமக்களிடமிருந்து பெறப்பட்ட சுமார் 200 வீடியோ கசற்றுக்கள் தற்சமயம் தபாலகத்தில் தேங்கிக் கிடப்பதால் இவை உரிய முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னரே மக்களிடமிருந்து வீடியோ கசற்றுக் களைப் பெற்று அனுப்பி வைக்கும் பணி மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவித்துள்ள அவர் இதற்கான ஒழுங்குகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் மேலும்தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு யுத்தம் காரணமாக மாணவர் கல்வித்தரம் வீழ்ச்சி

### - செல்வராசா எம். பி

(மட்டக்களப்பு)

யுத்தம் காரணமாகவும், வறுமை காரணமாகவும் பாடசாலைகளை விட்டு இடைவிலகுவோர் தொகை வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வருகிறது இதனைத்தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஏற்கனவே இடைவிலகிய மாணவர்களுக்கு உரிய அறிவூட்டலை வழங்கி மீண்டும் பாடசாலைக் கல்வியைத் தொடர நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்ப்பதற்கான பயிற்சி திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பல்கலைக்கழக அனுமதியைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே முன்னேறிய மாவட்டமாக கருதப்படுகிறது. ஆனால் 1981 ஆம் ஆண்டில் கணிப்பீட்டின் படி எழுத்தறிவற்றோர் தொகை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமாக இருந்தது இந்நிலை தொடர்வதை இன்றும் ஆங்காங்கே காண முடிகிறது,

இராணுவக் கட்டுப்பாடில்லாத பிரதேசங்கள் பல சுதந்திரத்திலிருந்தே அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டவை இதனால் வறுமையில் வாடி நின்ற அக்கிராமங்களில் தற்போதைய யுத்த சூழலில் பாதுகாப்புத் தரப்பினர் பொருளாதார தடைகளை விதித்து வருகின்றனர். இதனால் வறுமையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதால் கல்வியில் போதிய கரிசனை காட்ட முடியாத நிலை உள்ளது.

இந்த நிலை மாற்றமடையாது தொடர்ந்து செல்லுமேயானால் அப்பகுதி மக்களின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்றார் [க-14]

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம் / உடுவில் / ஏழாலை,
உபஅலுவலகங்கள்

ஆதனவரி அறிவித்தல்கள் - 2000

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 15ன் பிரகாரம் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் சார்பாக, ஆதன வரி அறவீடு சென்ற வருடம் அறவிட்ட விகிதத்தின் பிரகாரம் 2000ஆம் ஆண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 2000-01-31 ஆம் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்துபவர்கட்கு இவ் வருடத்துக்கான மொத்த வரியின் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு கந்தாயத்துக்கும் உரியவரியை அந்த கந்தாயத்தின் முதல் மாத இறுதிக்குள் செலுத்துபவர்கட்கு அக் கந்தாயத்துக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின், வசிப்பிடங்கட்கும் வெற்றுக் காணிகட்கும் 15% மும், ஏனைய ஆதனங்கட்கு 20% மும் விறாந்து கட்டணமாக ஆதனவரியுடன் சேர்த்து செலுத்தப்படவேண்டும்.

ஆதலினால் வரியிறுப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான வரிகளை 2000-01-31 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்களில் முழுவதுமாகச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர் அனைவரையும் அன்புடன்கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு;-

01. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கானவரிவிலக்கல்கள், மற்றும்ஏதாவது ஆட்சேபனைகளுக்குமான விண்ணப்பங்கள் யாவும் எழுத்துமூலமாக2000.01.31ம்திகதிக்கு முன்பதாக அந்தந்த அலுவலகங்கட்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

02. தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த ஆதனவரி அறிவித்தல்கள் காலதாமதமானாலும் இவ்வறிவித்தலையே ஆதனவரி அறிவித்தலாக ஏற்று தங்கள் தங்கள் ஆதனங்கட்கான ஆதனவரியை உரிய காலங்களில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் சேட்டுக்கொள்கின்றேன்.

தி. மா. செல்வராசா, ஜே. பி. யு. எம்,
தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிதெற்கு பிரதேசசபை அலுவலகம்,
சுன்னாகம்.
2000-01-07 (00061)

## மரத்துடன் வான் மோதி இருவர் காயம்!

(ஊர்காவற்றுறை)

வான் ஒன்று மரத்துடன் மோதிவிபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

ஊர் காவற்றுறையில் இடம் பெற்ற மேற்படி விபத்தில் அருளதாஸ் நவசோதி, ஜோர்ஜ் ஆகிய ஈ.பி.டி.பி உறுப்பினர்களே காயமடைந்தவர்களாவர். [34]

## களை கட்டிய நோன்பு நிகழ்ச்சி

(ஏறாவூர்)

நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள முஸ்லிம்கள் தமது நோன்புப் பெருநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

மேலும் அவர்கள் நாட்டில் நிரந்தர சமாதானம் மற்றும் சுபீட்சமும் ஏற்பட விசேட கூட்டுப்பிரார்த்தனைத் தொழுகைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

இதே வேளை கொழும்பு மேமன் சங்கத்தின் ஏற்பாட்டில், காலிமுகத்திடலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொழுகையில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நாட்டின் பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்வுகளை ஒட்டி கிழக்கு மாகாணத்தின் அநேக பகுதிகளில் வாணவேடிக்கைகளும் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்வுகள் எந்த ஒரு தரப்பினரதும் இடையூறுகளுமின்றி மிகவும் சிறப்பாக நடந்திருந்த அதேவேளை திருமலை, மட்டக்களப்பு, கல்முனை பகுதிகளில் இரவு நேர வியாபாரமும் களை கட்டியிருந்தது. [க]

### யாழ் மாவட்டத்தில்

## மூன்று கோடி ரூபா செலவில் வறியோர் வீடமைப்புத்திட்டம்

யாழ். மாவட்டததில் உள்ள வறிய குடும்பத்தினர், தமக்கான இருப்பிடங்களை அமைக்கும் பொருட்டு தேசிய வீடமைப்பு அதிகார சபை இவ்வருடம், 3 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தொகுதி ரீதியாக 100 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட இருப்பதுடன், 1000 குடும்பங்கள் இதனால் பயனடைவர் என்றும் தெரிய வருகிறது.

தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு வீடுகட்டும் பணிக்காக 20 000 ரூபா கடனாகவும் 10 000 ரூபா நிவாரணமாகவும் பிரதேச செயலர் மூலம் நிவாரணமாக 25 000 ரூபாவும் வழங்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். பிரதேச பிராந்திய முகாமையாளர் எஸ்.மாசிலாமணி அறிவித்துள்ளார்.

இதேவேளை மேற்படி பணிக்காக சென்ற வருடம் ஒதுக்கப்பட்ட 2 கோடி 40 இலட்ச ரூபா நிதியில் இருந்து 800 வீடுகள் நிர்மாணிக்கும் பணியில், 300 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளமையும் 500 வீடுகள் கட்டும் பணி துரிதமாக நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே.

### கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில்

## ஜீ. ரீ. சற் நிறுவனத்தின் உதவியுடன் மலசல கூடத்தொகுதி நிர்மாணிப்பு

(அச்சுவேலி)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஜீ. ரீ. சற் நிறுவனத்தின் பொருளுதவியைக் கொண்டு நவீன வசதிகள் கொண்ட மலசல கூடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. என் சிவகடாட்சம் தெரிவித்துள்ளார்.

இம் மலசல கூடத் தொகுதியில் ஆண்களின் பாவனைக்காக இரண்டு, பெண்களின் பாவனைக்காக இரண்டு மற்றும் ஆசிரியர்களின் பாவனைக்காக இரண்டுமாக மொத்தம் 6 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டிருப்பதாயும் தெரிவித்துள்ள அவர் இதன் மூலம் நீண்ட காலமாக நிலவிவந்த மலசல கூட பற்றாக்குறைப் பிரசினை தீர்ந்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-14)

# பொது சாதாரண பரீட்சைக்கான வழிகாட்டி

2000 ஆம் ஆண்டு தொடக்கம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சையுடன் நடைபெறவுள்ள பொது சாதாரண பரீட்சை பற்றிய விளக்கமும், பொருத்தமான கேள்விகளும் எமது உயர்தர மாணவர்களின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

பொது சாதாரண பரீட்சை பற்றி இங்கு தரப்படும் விளக்கமும் கேள்விகளும் - கல்வி உயர்கல்வி அமைச்சும்-பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பரீட்சை அலகும் இணைந்து வெளியிட்ட பொது சாதாரண பரீட்சைக்கான கற்றல் வழிகாட்டலிலிருந்து தொகுக்கப்பட்டது.

### பொதுச் சாதாரணப் பரீட்சையின் புள்ளிகள் மாணவர்களின் பல்கலைக்கழகப் பிரவேசம் பற்றித் தீர்மானிக்கப் பயன்படுத்தப்படும் விதம்.

பொதுச் சாதாரணப் பரீட்சையில் மாணவர்கள் பெறும் புள்ளிகள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குத் தகுந்தவர்களைத் தெரிவு செய்யப் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பாகக் கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் இ. க/ 103 இலக்கத்தையும் 98. 07. 31 ஆம் தேதியும் கொண்ட 98/ 25 ஆம் இலக்கச் சுற்று நிருபத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பரீட்சையிலே தேறுதல் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்குரிய தனித் தகைமையாக மாத்திரம் கருதப்படுமெனத் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது. தீர்மானிக்கப்படும் குறைந்தபட்சப் புள்ளியை அடிப்படையாய்க் கொண்டே தேறுகைபற்றி முடிபு செய்யப்படும் க. பொ. த. (உ. த.)ப் பரீட்சையின் மற்றைய பாடங்கள் தொடர்பாகப் போன்று உயர்ந்தபட்சப் புள்ளிகளை அடிப்படையாய்க் கொண்டு அது தீர்மானிக்கப்பட மாட்டாது. இது தெரிவுப் பரீட்சையின் இயல்பைக் கொண்டிருப்பதில்லை அதில் அடைவுப் பரீட்சையின் இயல்பே இருக்கும். அடைவுப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும் இழிவுப் புள்ளி மட்டம் நோக்கிச் செல்வதே மாணவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும்.

1998 ஆம் ஆண்டிலே 12 ஆந் தரத்தில் பிரவேசித்து 2000 ஆம் ஆண்டில் க, பொ. த (உ. த)ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே தகுதியானவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிந்தெடுப்பதற்கு அவர்கள் க. பொ. த. (உ. த)ப் பரீட்சையில் தோற்றும் மூன்று பாடங்களுக்குப் பெறும் புள்ளிகளின் மொத்தமே பயன்படுத்தப்படும். மாணவர்கள் மூன்று பாடங்களுக்கும் பெறும் புள்ளிகள் எவ்வளவு உயர்ந்தனவாக இருந்தாலும் பொதுச் சாதாரணப் பரீட்சையில் தேறத் தேவையான இழிவுப் புள்ளிகளைப் பெற்றிராவிட்டால் அவர்களுக்குப் பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடைக்கமாட்டாது. எவ்வாறாயினும் இப்பரீட்சை காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1993/ 1994 ஆம் ஆண்டில் அம் மாவட்டங்களிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசித்த மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவாக இராதவாறு பார்த்துக்கொள்ளப்படுமெனக் கௌரவ கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரண அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். எந்தவொரு காரணத்திற்காகவும் 2000 ஆம் ஆண்டிலே எந்தவொரு மாவட்டத்திலிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் தகுதிகளை உடைய மாணவர்களின் எண்ணிக்கை அவர்கள் பொதுச் சாதாரணப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் காரணமாகக் குறைந்தால் என்ன நடைபெறும் என்னும் வினா கட்டாயம் எழும். எவ்வாறாயினும் அம்மாவட்டத்திலிருந்து 1993/ 1994 ஆம் ஆண்டிலே பல்கலைக்கழங்களுக்குச் சம எண்ணிக்கையான மாணவர்களை அனுமதிப்பதற்குப் பொதுச் சாதாரண பரீட்சையில் அம்மாவட்டத்தின் மாணவர்கள் பெற வேண்டிய இழிவுப் புள்ளிகள் தக்கவாறு குறைக்கப்படுதல் வேண்டுமெனக் கௌரவ அமைச்சர் கட்டளையிட்டுள்ளார்.

### பொதுச் சாதாரணப் பரீட்சையின் கட்டமைப்பு

இப்பரீட்சை பின்வரும் நான்கு நுண்ணறிவு இயல்புகளைப் பரீட்சிப்பதற்குத் தயாரிக்கப்பட்டுள்ளது.

★ பொது விழிப்பு
★ பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்
★ நியாயிக்கும் (பகுத்தாய்வு, முறைமை எண்வெளி) ஆற்றல்
★ கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல்

முன்னோடிப் பரீட்சையிலிருந்து பெறப்பட்ட அனுபவங்களுக்கேற்ப பொதுச் சாதாரணப் பரீட்சையின் காலவெல்லை இரண்டரை மணித்தியாலமாகஇருத்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பரீட்சை ஒவ்வொன்றும் 5 தெரிவுகளைக் கொண்ட விடய வரிசையில் அமைந்த 60 பல்தெரிவு வினாக்களைக் கொண்டிருக்கும். பொதுச் சாதாரணப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் உரியனவாகும். மேற்குறித்த பகுதிகளுக்குப் புள்ளிகள் பின்வருமாறு வழங்கப்படும்.

● பொது விழிப்பு 15 வினாக்கள்-25 புள்ளிகள்
● பிரச்சினை தீர்க்கும் ஆற்றம் 15 வினாக்கள்-25 புள்ளிகள்
● நியாயிக்கும் ஆற்றல் 15 வினாக்கள்-25 புள்ளிகள்
● கிரகிப்பதற்கும் தொடர்பாடலுக்குமான ஆற்றல். 15 வினாக்கள்- 25 புள்ளிகள்

### பொதுச் சாதாரணப் பரீட்சையின் கட்டமைப்பு

பொதுச் சாதாரணப் பரீட்சையை ஆக்கும் கூறுகளை அல்லது ஆற்றல்களை நான்கு வகைகளாக விவரித்தல் இப்பகுதியின் அடிப்படை நோக்கமாகும். இங்கு ஒவ்வொரு கூறினதும் கருத்து தெளிவாக்கப்பட்டிருக்கும் அதேவேளை அக்கூறுகள் தொடர்பாக உதாரணங்களும் தரப்படும்.

### பொது விழிப்பு

பொது விழிப்பு என இங்கு கருதப்படுவது தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருக்களும் தகவல்களும் பற்றிய சாதுரியமான விழிப்பாகும். பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டிற்கு முந்திய இரு ஆண்டுகளின்போது பின்வரும் துறைகளில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான எண்ணக்கருக்களும் தகவல்களும் பற்றி மாணவர்களின் விழிப்பு இப் பகுதியின் வினாக்களின் மூலம் பரீட்சிக்கப்படும். அத்துறைகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2-11 பொருளாதாரம் | 2-12 அரசியல் |
| 2-13 சமூகவியல் | 2-14 பண்பாடு |
| 2-15 சுற்றாடல் | 2-16 நீதி |
| 2-17 விஞ்ஞானம் | 2-18 தொழிநுட்பம் |

இதன் மூலம் பிள்ளைகளிடம் தாம் வாழும் உலகம் பற்றி அறிந்துகொள்வதற்கும், செய்தித்தாழ் வாசித்தல், வானொலிச் செய்திகளைக் கேட்டல் போன்ற பழக்கங்களை விருத்திசெய்யலாமென எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும்பாலான மாணவர்கள் தகவல்களை அறிந்துகொள்வதில் அவ்வளவு ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. பொது விழிப்புப் பற்றிய விடயங்களுக்குத் திட்டமான எல்லையும் பொருத்தப்பாடும் இருத்தல் வேண்டும். ஆகையால் இதன் கீழ் தர உத்தேசிக்கப்பட்டிருக்கும் வினாக்கள் பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டுக்கு முந்திய இரு ஆண்டுகளின் போதும் வெளியிடப்பட்ட செய்தித்தாழ்களுக்கும் செய்தித்தாழ்களில் வெளிவந்த நிகழ்ச்சிகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் குறைந்தபட்சம் வார இறுதியில் வெளியிடப்படும் பிரதான செய்தித்தாழ் ஒன்றில் மேற்குறித்த துறைகள் பற்றிய விடயங்களில் கவனஞ் செலுத்த எதிர்பார்க்கும் பொது விழிப்பைப் பெறப் போதியதாகுமெனக் கருதப்படுகின்றது.

### பொருளாதாரம் (சர்வதேச) சார்ந்த வினா

உதாரணம்:-

[1] அபிவிருத்தியடையும் நாடுகள் சிலவற்றின் அமைப்பாகிய குழு 15 (G15) இன் உறுப்புரிமையை 1999 ஆம் ஆண்டில் பெற்ற நாடு யாது?

(1) இந்தியா (2) பாகிஸ்தான் (3) நேப்பாளம்
(4) இலங்கை (5) பங்களாதேஷ்

### பொருளாதாரம் தேசிய

உதாரணம்:-

[2] 1998 ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்ட பொருள்கள், சேவைகள் வரி (GST) எத்தனை சதவீதமாக அறவிடப்படுகின்றது?

[1] 10% [2] 12% [3] 12.5% [4] 13% [5] 13.5%

### அரசியல் (சர்வதேச)

உதாரணம்:-

[3] அண்மையில் பண்டைய யுகொஸ்லேவியாவில் கொசோவோ மாநிலத்தில் ஏற்பட்ட இனக் கிளர்ச்சி தொடர்பாகச் சேர்பியாவில் குண்டுகளைப் பொழிந்தது.

(1) ஐக்கிய இராட்சியம் (2) ரூசியா
(3) ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் (4) நேற்றோ ஸ்தாபனம்
(5) ஜெர்மனி

### சமூகவியல் (சர்வதேச)

உதாரணம்:-

[4] 1999 ஆம் ஆண்டின்போது மக்கள் மத்தியில் மூன்று நபர்கள் பிரபலமாக இருந்தனர். அவர்கள் அட்டல் பிகாரி வாஜ்பாய், அமிதா பச்சன், அமிர்தியா சென் ஆகியோராவர் அவர்கள்.

[1] பொருளியலறிஞர்கள் [2] அரசியலறிஞர்கள்
[3] சினிமா நடிகர்கள் [4] திரைப்பட இயக்குநர்கள்
[5] இந்தியர்கள்

### பண்பாடு

(5) 1999 ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் நடைபெற்ற உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டித் தொடரில் இறுதிப் போட்டிக்காகத் தகுதியானவர்களைத் தெரிந்தெடுப்பதற்குப் போட்டியிட்ட 'சுப்பர் சிக்ஸ்' என்ற ஆறு குழுக்களுக்கு உரியதாக அமையாத இரு குழுக்களைக் கொண்ட விடை யாது?

[1] தென் ஆபிரிக்கா - அவுஸ்திரேலியா
(2) நியூசிலாந்து - சிம்பாப்வே
[3] இந்தியா - பாகிஸ்தான்
[4] சிம்பாப்வே - தென்னாபிரிக்கா
(5) இங்கிலாந்து - கென்யா

### சுற்றாடல் (சர்வதேசம்)

(6) 1998 ஆம் ஆண்டில் போன்று 1999 ஆம் ஆண்டிலும் சுற்றாடலியலாளர்கள் பச்சைஇல்லவிளைவுஎன்னும் தலைப்புப் பற்றியே அதிக அளவில் கலந்துரையாடினர்.

பச்சையில்ல விளைவு என்றால் என்ன?

(1)கோள வெப்பம் அதிகரித்தல்
(2)பச்சை இல்லங்களில் தாவரங்களை நடுதல்
(3)தாவரங்களினால் சூரிய சக்தி உறிஞ்சப்படுதல்
(4)பச்சை நிறப் பொருள் கருநிறப் பொருள்களைக் காட்டிலும் குறைவாக சூரிய ஒளியை உறிஞ்சுதல்
பச்சை நிற இல்லங்களில் வாழும் உயிரினங்களில் சூரிய ஒளியின் செல்வாக்கு ஏற்படுதல்

[தொடரும்]

## 'சுறா' தாக்கி உல்லாசப் பயணி மரணம்

(பாங்கொங்)

சுறாமீன் தாக்கியதால் ஜேர்மன் உல்லாசப் பயணி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

ஸ்டீபன் ஓலாப் கால் (வயது 35) என்பவரே தெற்குத் தாய்லாந்தில் சுறாவால் தாக்கப்பட்டவராவார்.

சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட காயங்களிலிருந்து அதிக குருதி வெளியேறியமையால் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதற்கு முன்பாகவே அவர் இறந்துவிட்டார்.

அவரின் உடலில் உள்ள காயங்களைக் கொண்டே அவர் சுறா மீனால் தாக்கப்பட்டமை மருத்துவர்களால் கூறப்படுகின்றது. (வ-5)

## (இராசி பலன்)

11.01.2000 செவ்வாய்க் கிழமை
(தமிழுக்கு மார்கழி 27)
சதுர்த்தி காலை 8.09 வரை, சதயம் மாலை 4.32 வரை, மரணயோகம்-இராகு காலம் மாலை 4.03 முதல் 5.30 வரை, சுபநேரம் காலை 11.34 முதல் 1.04 வரை.

**மேடம்**
விருந்துபசாரம், நண்பர் குறும்பு, மனநிம்மதி.

**இடபம்**
வாதத்திறமை, தொழில் பாராட்டு, தியாக சிந்தை.

**மிதுனம்**
தடுமாற்றம், பயப் பீதி, தொழில் நஷ்டம்.

**கடகம்**
தொழில் கவலை, கடன் படல், குடும்பப் பிரிவு.

**சிங்கம்**
பெண்கள் அறிவுரை, பயணம், வெற்றி வாய்ப்பு.

**கன்னி**
மகிழ்ச்சியான உதவி, இல்லச் சிறப்பு, பிறர் சிந்தனை.

**துலாம்**
தந்திரோபாயம், மாதா கவலை, குளப்பமடைதல்.

**விருச்சிகம்**
புத்திரர் செலவு, குடும்பப் பற்றின்மை, அலைச்சல்.

**தனுசு**
முதியோர் ஆசி, தொழில் லாபம், உற்சாகம்.

**மகரம்**
அயலவர் துன்பம், முரட்டுத் தனம், பாதகமான செயல்.

**கும்பம்**
நல்லோர் சந்திப்பு, வெகு தனம், புத்திரர் சிறப்பு.

**மீனம்**
கடமை தவறுதல் ஏமாற்றப்படல், மனச் சுமை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா.

## தடுப்பு மருந்துகள் தட்டுப்பாடு

(மந்திகை)

மந்திகை மருத்துவமனையில் தடுப்பு ஊசி மருந்துக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது.

நீரிழிவு நோயாளிகளுக்கான இன்சுலின் ஊசி மருந்தும் குழந்தைகளை பிரசவித்த தாய்மார்களுக்கும் ஏற்றும் தடுப்பு ஊசி மருந்து, பாம்புகடி ஊசி மருந்து என்பவற்றுக்கே பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. [23[

## சத்துணவு வழங்கல்

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் போஷாக்குக் குறைந்த தாவடிப் பகுதி வாழ் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தாவடி காளிகோயிலடி சனசமூக நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளது. மாதம் இருமுறை இச்சத்துணவு வழங்கும் நிகழ்வு இடம் பெறுமெனத் தெரியவருகின்றது

## ஐயப்பசுவாமி மகரஜோதி பூசை

சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் மகரவிளக்கு மகர ஜோதிப்பூசை வழிபாடுகள் வரும் 14ஆம் திகதி வெள்ளிக் கிழமை 12 மணி முதல் நடைபெற உள்ளது.

உடுவில் லவ் லேனில் உள்ள க. சிவபாலசுந்தரம் என்பவருடைய வீட்டில் நடைபெற உள்ள நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு ஐயப்ப சுவாமியைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று ஏகுமாறு வேண்டப்படுகின்றனர்.

# செய்தித் துளிகள்

## கருத்தரங்கு

கோப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இந்திரராஜா தலைமையில். சுகாதாரத் திணைக்களத்தால் சுகாதார ஊழியர்களுக்கான மீள் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெற்று வருகிறது.

கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமான இந்நிகழ்வு வரும் 12 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

## நாளை விண்ணப்பம் முடிவு

யாழ். பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக்கழகங்கள் 2000 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்குநாளை (12 - 1 - 2000) வரை விண்ணப்பிக்கலாம் என்று யாழ். பிரதேச செயலர் திரு. பா. செந்தில்தத்தனன் விளையாட்டுக்கழகங்களுக்கு அறிவித்துள்ளனார். (வ)

## கஜூமரக் கன்றுகள் விநியோகம்

[ஊர்காவற்றுறை]

ஊர் காவற்றுறை பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற விசேட நிதியில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கஜூமரக் கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டு இலவசமாக பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளதாக ஈ.பி.டி.பி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். [க-05]

## அஞ்சலிக் கூட்டம்

(மந்திகை)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று அல்வாய் விநாயகர் சனசமூக நிலையத்தில் சி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அன்னாரின் உறவினர்கள் நண்பர்கள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

## பாடசாலை உபகரணங்கள்

(பாஷையூர்)

பதற்ற நிலையால் இடம் பெயர்ந்துபாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் வசித்து வரும் பாடசாலை மாணவர்களுக்கு இப்பங்குத் தந்தை அருட்திரு .ரவிச்சந்திரன் கொப்பி . பேனா பென்சில் போன்றன வழங்கினார். (க-33)

## கண்காட்சி

(அச்சுவேலி)

கடந்த வருடம் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்பட்ட தொழில் திறன் பயிற்சிநெறிகளின்கண்காட்சி இம் மாத இறுதிப் பகுதியில் நடைபெற விருப்பதாக முறைசாரா பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டிற்கான புதிய பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அவர் இப்பயிற்சிநெறிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (க-14)

## மேற்பார்வை

[மந்திகை]

வடமராட்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் குழு மேற்பார்வை இன்று 11-ம் திகதி ஆரம்பமாகும்.

கடந்தவருடம்பாடசாலைகளில் அமைக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி குழுக்களை சந்தித்து அவர்களின் செயற்பாடுகளைபார்வையிட உள்ளதாக வடமராட்சி கல்வி வலய பணிப்பாளர் சி. சிவராசா தெரிவித்துள்ளார். (க-23)

## கல்வி நிலையங்கள் இயங்குகின்றன

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் நிலவிய அசாதாரண நிலை காரணமாக இயங்காமல் இருந்த தனியார் கல்விநிலையங்கள் தற்போது சிறப்பாக இயங்கி வருகின்றன.

வரணி,கொடிகாமம்,கச்சாய் மீசாலை, சாவகச்சேரி மந்துவில் பகுதிகளில் உள்ளகல்வி நிலையங்கள் சிறப்பாக இயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-28)

## ஒரே சூலில் 3 குழந்தைகள்

(கொழும்பு)

புத்தாயிரம் ஆண்டு பிறந்த பின் உலகளாவிய ரீதியில் முதல் தடவையாக இலங்கையைச்சேர்ந்த தாயொருவர் ஒரே பிரசவத்தில் 'மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

இத் தாய் களுத்துறை தெதிவளையைச் சேர்ந்த இரேஸா தெனுறுக்சி (வயது 16) என்பவராவார். இவை மூன்றும் பெண்குழந்தைகளாவர். இவைமுறையே 12. 51, 12. 52, 12. 53, என்ற மணியளவில் பிரசவிக்கப்பட்டன.

இத்தாயும் மூன்று பிள்ளைகளும் பூரண ஆரோக்கியத்துடன் இருப்பதாக வைத்தியசாலைப்பெண் தாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## குளங்கள் புனரமைப்பு

(தென்மராட்சி)

உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியுடன் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள நுணாவில் மேற்கு, தனங்கிளப்பு ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளில் மேற்கொண்ட குளம் ஆழமாக்கல் பணிகள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ் இரு பகுதிகளிலும் குறித்த வேலைத்திட்டங்களை முழுமையாக மேற்கொள்வதற்கு மக்கள் பங்களிப்பு போதியளவு கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த வேலைத்திட்டங்களில் 60.24 வீதம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிக்கைகள் மூலம் அறியப்படுகின்றது.

## பிரதான வீதி பாவனையில்

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதி வல்லைப் பகுதியில் சேதமடைந்திருந்தபாலம் புதிதாக கட்டிமுடிக்கப்பட்டமையால் தற்போதுபாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பாலம் சேதமடைந்திருந்ததால் தொண்டமனாறு வீதியால் போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது (க-11)

---

மட்டக்களப்பு- காத்தான்குடி

# கிளைமுகாமையாளர்கள்போராட்டம் பாவனையாளர் பெரிதும் சிரமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்கள் கடந்த முதலாம் திகதி முதல் சுகவீன லீவுப் போராட்டத்தில் குதித்துள்ளதாக சங்கத்தின் ஊழியர் சங்க செயலாளர் எம். ஐ. எம். முஸ்தபா தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரமாய்த் தொடரும் இப்போராட்டத்தினால் பிரதேசத்திலுள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கக் கிளை உட்பட எட்டுக்கிளைகளும் மூடப்பட்டுள்ளன.

சங்கத்தின் தலைவர் நடந்த சம்பவமொன்றை திரிபுபடுத்தி தொடர்பு சாதனங்களுக்கு செய்தி கொடுத்ததைக் கண்டித்தே இந்த சுகவீனப் போராட்டம் நடாத்தப்படுவதாக கிளை முகாமையாளர்கள் தெரிவித்தனர்.

இப்போராட்டத்தினால் வெள்ள நிவாரண விநியோகம், சமுர்த்தி நிவாரணம், பால்மா விநியோகம் என்பன தடைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 5400 குடும்பங்கள் இப்பிரதேசத்தில் சமுர்த்தி நிவாரணம் பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக சங்கத்தின் பொது முகாமையாளரிடம் எமது செய்தியாளர் வினவிய போது, சுகவீன லீவிலுள்ள கிளைமுகாமையாளருக்குப் பதிலாக புதியவர்களைக் கொண்டு நிவாரணங்களை பொது மக்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் இது வரை நிவாரணங்கள் சங்கக்கிளைகளினூடாக வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய ஸ்ரீ ஞான வைரவசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் வரும் 16-ம் திகதி ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை. தொடர்ந்து 10 தினங்கள்நடைபெறவுள்ளது.

ஆலய பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ கிரியாரட்ணசாமாமணி நா. பாலசுப்பிரமணிய குருக்கள் தலைமையில் தினமும் பூஜை வழிபாடுகள் இடம்பெற இருப்பதுடன் உற்சவ தினங்களில் மாலை 5.30 தொடக்கம் 6.45 வரை இரா செல்வவடிவேல் மகாபாரத விரிவுரை நிகழ்த்துவார்.

## சேதமடைந்த வீடுகளுக்கு ரூபா 5000

(தென்மராட்சி)

வடமாகாண புனரமைப்பு புனர் வாழ்வு அதிகாரசபையின் நிதியுதவியுடன் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 1636 பேருக்கு சேதமடைந்த வீடுகள் திருத்தத்திற்காக முதல் கட்டமாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் இத்தொகையினரின் 705 பேருக்கு இரண்டாம் கட்டக்கொடுப்பனவாக தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளதெனவும் மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகளை கணிப்பீடு செய்து மீதிக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## வீடுகளுக்கு திரும்பவில்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களை அடுத்து மருதங்கேணி, உடுத்துறை, தாளையடிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள செம்பியன்பற்று, மாமுனைப் பகுதிகளில் உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தங்கி உள்ளனர்.

இதேவேளை தாளையடிப் பகுதி மக்களில் 85 வீதமான மக்கள் தற்போதும் தாளையடிப் பகுதிகளிலேயே தங்கி உள்ளனர். ஏனைய மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்துள்ளனர். (க-43)

## புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரிமுதல் கூட்டுறவுஊழியர்களுக்குபுதியசம்பளம்

(யாழ்ப்பாணம்)

புத்தாயிரமாம் ஆண்டு ஜனவரிமாதம் முதல் கூட்டுறவு ஊழியர்களுக்கு புதிய சம்பளத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய சம்பளத்திட்டம் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் செல்வி ; றூ. கனகரட்ணம் 31/99இலக்க முடைய சுற்றுநிருபம் ஒன்றை சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

கூட்டுறவு ஊழியர்களுக்கான புதிய சம்பளத்திட்டம் தொடர்பாக அச்சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கூட்டுறவு ஊழியர்ஆணைக்குழுவினரால்பதவி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே இப்புதிய சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

கூட்டுறவு ஊழியர் நடைமுறைக்கோவை 1,7க்கு அமைவாகதற்காலிக அமைய ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கும் இப்புதியசம்பளத்திட்ட பிரகாரம் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதாக இருந்தால் அதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணயாளரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும்அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது,

## இரத்த வங்கி மீண்டும் இயங்குகிறது இரத்ததானம் செய்யவேண்டுகோள்

[புலோலி]

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நீண்ட காலமாக இயங்காதிருந்த இரத்த வங்கி மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது. எம். எஸ். எவ். வைத்திய சேவைக்குழுவினர் சேவை வழங்கத் தொடங்கியதையடுத்தே இரத்த வங்கியும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இவ்வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்தம் தேவைப்படுவதால் இரத்ததானம் செய்ய விரும்புபவர்களை வைத்தியசாலை இரத்தவங்கியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. மயிலேறும் பெருமாள் அறிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் தற்போது சத்திர சிகிச்சைகள் எம். எஸ். எவ். வைத்திய சேவைக்குழு சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். வரோனிக்காவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

வைத்தியசாலையில் குடும்பத்திட்ட சத்திர சிசிச்சைகளும் செவ்வாய், சனிக்கிழமைகளில் நடைபெறுமென மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்

[52 வ[

## ஆண்டு 6 க்கான விசேடசெயல்திட்டம்

(ஏறாவூர்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 6ம் ஆண்டுக்கான விசேட செயற்திட்டம் ஒன்றினை இவ் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தவுள்ளது.

ஏற்கனவே அமுல் படுத்தப்பட்ட 5ம் ஆண்டு செயற்றிட்டம் மூலம் குறிக்கப்பட்ட இலக்கு எய்தப் பட்டதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டத்தில் பாடசாலை பௌதிக வளம், ஆசிரியர் வளம் மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் சாதனம் கல்வி மேம்பாடு என்பவற்றிக்கு விசேட சலுகை அளிக்கப் படவுள்ளதாகவும் செயலாளர் டிவகலாலா மேலும் கூறினார்.

## பண்டாரநாயக்கா ஞாபகார்த்த இரண்டு மாடிக் கட்டடம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவால் நிக்கம்புல பொறகொல்ல பிரதேசத்தில் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியொன்றில் அமரர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமான நூலகம் ஒன்றும், கலாசார மண்டபமும் அமைக்கும் பணி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 4 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் 2 மாடி கொண்ட கட்டடமொன்றில் அமைக்கப்படவுள்ள இந் நூலகத்தில் புத்தக நிலையம், கேட்போர்கூடம், கணனிப்பிரிவு, செவிப்புல, கட்புல பிரிவுகள் இயங்க வைக்கப்பட உள்ளன.

இக் கட்டடத்திற்கான நிர்மாணப் பணிகளை பிரதியமைச்சர் பேராசிரியர் ஏ. வி. குணதீர ஆரம்பித்து வைத்தார்.

இடிப்பாரை இல்லாத
ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும்
கெடும்.

- குறள்

வலம்புரி

## வேற்றுமையில் ஒற்றுமை

இந்த மண்ணிலே அரசியல் ஸ்த்திரம் சேற்றில் நட்ட கம்பம் போல் காலத்துக்குக்காலம்தளம்பிய காரணத்தால் அவலங்களும், அழுகுரலும் மலிந்து விட்டன. குறிப்பாகச் சொல்லப் போனால் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து குதூகலித்த மண்ணிலே விழியெனும் மொழிக்கு ஆராய்ச்சி மகா நாடு 1974 தைத்திங்கள் 9ஆம் நாள் நடைபெற்றது. அன்றைய ஆட்சித் தலைமை அனுமதி மறுப்புத் தெரிவித்த போதும் மகா நாடு திட்டமிட்டபடி நடைபெற ஏற்பாடாகியது. முதற் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமைதாங்கினார்.

உணர்ச்சி வெள்ளம் ததும்ப பல்வேறு இடங்களிலும் இருந்து சன வெள்ளம் வீரசிங்கமண்டபத்தை நிரப்பியது. போதாமைக்கு முற்ற வெளியிலும் முட்டி மோதியது. உணர்ச்சிகரமான உரைகள் நடைபெற்றபோது திடீரென ஏற்பட்ட சீருடையினர் முற்றுகையாலும், மூர்க்கத்தனமான செயலாலும் நிகழிடம் இருள் சூழ்ந்தது. துப்பாக்கி வேட்டால் அறுந்த மின்சாரத்திற்கு பதினொரு இன்னுயிர்கள், விடுதலை உணர்வுக்கு தலத்திலேயே உரமாயினர். மக்கள் திக்கு முக்காடி நாலா திசையும் கலைந்தனர் கண்ணீர்ப் புகையால் மயங்கி விழுந்தனர்.

அன்றைய நீதியின் மறைப்பு- அதர்மத்தின் தலையெடுப்பு உரிமை மறுப்பு- வாழ், வாழ விடு என்ற யதார்த்த உணர்வின் சிதைவு இன்று வரை பேரழிவைச் செய்து கொண்டே இருக்கிறது. இந்துவின் நித்திலம் என்பார்கள் ஸ்ரீலங்காவை. ஆனால் ஒளிமங்கி உருக்குலைந்து அல்லாவா காட்சி தருகிறது. யாது பிழையும் புரியாத பதினொரு பேரின் இறப்பைத் தொடர்ந்து இன்று வரை மரண ஓலங்கள் மண்ணை அமங்கலப் படுத்துகிறது. அறம் தழைக்க ஆட்சியாளர் அகம் திருந்துவது எப்போ? நீதியை நிலை நிறுத்தி அணைந்து அணைத்துக் கொள்வதெப்போ? வேற்றுமையில் ஒற்றுமை காண்பதெப்போ?

அன்புடன் ஆசிரியர்

மாஸ்கோவில்

# அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் மத்திய கிழக்கு பேச்சுவார்த்தை

(வோஷிங்டன்)

அமெரிக்க மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் பெப்ரவரி முதலாம்திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர் இவானோவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் நேருக்கு நேர் இடம் பெற்று வந்த மத்திய கிழக்கு பேச்சு வார்த்தைகள் அண்மையில் தடங்கல் அடைந்திருந்ததை அடுத்து அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் உடனடியாக மேற்கு வேர்ஜீனியா சென்று இஸ்ரேல், சிரியா ஆகிய நாட்டுத் தலைவர்கள்பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு ஊக்கம் கொடுத்திருந்தார்.

இதையடுத்து பெப்ரவரி முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகவுள்ள இப் பேச்சுவார்த்தைகள் மஸ்கோவில் நடைபெறவுள்ளன.

மேற்படி பேச்சு வார்த்தைகள் வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்திலேயே மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதனால் இது முன்னேற்றகரமானதாக அமையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-14)

## இந்திய ரெக் 2000 கண்காட்சி

தொழிற்துறைக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் தகவல் தொழிநுட்பம் ஆகியன பற்றிய ''இந்தியா ரெக் 2000'' என்ற கண்காட்சி, கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று ஆரம்பமாகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் கலந்து கொள்கின்ற இக் கண்காட்சி வரும் 14 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள தொழிலதிபர்களுடன் இந்திய தொழிலதிபர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும், இந்திய இலங்கைக்கிடையேயான தொழிநுட்ப முதலீட்டு நிலைமையை அதிகரிக்கவும் இக்கண்காட்சி வழி வகுக்கும் என நம்பப்படுகிறது.

## இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் இம்மாதம் சீனா செல்லவுள்ளார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் எதிர் வரும் 17 ஆம் திகதி சீனா - பாகிஸ்தான் இரு தரப்பு பிராந்திய விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு சீனாவிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

இரு நாள் விஜயம் மேற்கொண்டு சீனா செல்லும் அவர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய பின் மேற்கொண்ட முதல் பிரயாணம் இது வாகும்.

இதேவேளை இராணுவ ஆட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நாவஷ் செரீப் சிறைச்சாலையில் இருந்தபடியே தமது மனைவியாருடன் இணைந்து ஈஸ்ற் பெருநாளைக் கொண்டாடியுள்ளார். (க-14)

## பிறேசிலில் தொடரும் அடைமழை 60 பேர் பலி! பலர்வீடு இழப்பு

(மெக்சிக்கோ)

பிறேசில் நாட்டில் தொடரும் மழை மற்றும் புயல் காரணமாக 60 பேர் வரையில் மரணமடைந்துள்ளனர் பல்லாயிரக்கணக்கானோர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

மழை மற்றும் வெள்ளம் காரணமாகவும், குளங்கள், ஆறுகள், உடைப்பெடுத்ததன் காரணமாகவும்வீதிப்போக்குவரத்து பெரிதும் தடைப்பட்டுள்ளது.

போக்குவரத்து சீர்குலைந்துள்ளதுடன் மக்களுக்கான நிவாரண விநியோக நடவடிக்கை கூட வெகுவாக பாதிப்படைந்துள்ளது.

மேலும் வெள்ளத்தில் சிக்கியோரை மீட்கும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## செச்சினிய போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது திணறும்ரஷ்யப்படை

செச்சினியா மீது ரஷ்யா மிகப்பாரிய அளவில் தமது முழுபலத்துடனும் தாக்குதல் நடாத்துகின்ற போதிலும் செச்சினியர்களின் கைமிகவும் மேலோங்கி இருப்பதனால் ரஷ்யப் படைகள் பெரும் இழப்புக்களை சந்தித்து வருவதனை ரஷ்ய இராணுவத் தரப்பினர் ஒத்துக்கொண்டு வருகின்றனர்.

செசசினிய போராளிகள் ஏவுகணைகள், துப்பாக்கிகள் நஞ்சூட்டப்பட்ட வாயுக்கள் கொண்டு தாக்குதல் தொடுப்பதனால் ரஷ்ய இராணுவத் தரப்பு அச்சம் அடைந்திருப்பதுடன் பாரிய உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் இராணுவச் சடலங்களை வண்டி வண்டியாக தமது பகுதிக்கு கொண்டு செல்வதாகவும் அங்கிருந்து கிடைக்கும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை ரஷ்யர்களால் அண்மையில் கைப்பற்றப்பட்ட குரொஷ்னியின் தென்கிழக்கு நகரான சாரிளியை செக்சினியப் படைகள் தமது அதிரடி நடவடிக்கை மூலம் மீளவும் மீட்டுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (09)

## தீவிரவாதிகளது நடமாட்டத்தை தடுக்க இந்தோனேசியாவில் பலத்த ஏற்பாடுகள்

(ஜகார்த்தா)

இந்தோனேசிய கடற்படையினர் மலுக்தீவுகளைச்சுற்றி தீவிரவாதிகளது நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தி உள்ளனர்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக மலுக் தீவுகளைச் சுற்றி9யுத்தக் கப்பல்களும் 5கண்காணிப்பு விமானங்களும் தொடர் ரோந்தில் ஈடுபட்டு வருகின்றன,

இந்தோனேசியாவில் ஏற்பட்ட வன்முறைகளை அடக்குவதற்காக கடந்த மாதம் தொட்டு மலுக்தீவின் சட்ட ஒழுங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளமை தெரிந்ததே, (09)

## புகைத்தலினால் உலகம் பூராயும் வருடம் 40 லட்சம் பேர் மரணம்

[புதுடில்லி]

புகைப்பிடித்தல் தொடர்பான நோய்கள் காரணமாக வருடாந்தம் உலகெங்குமாக உள்ள சுமார் 40 லட்சம் பேர் கொல்லப்படுவதாக உலக வர்த்தக ஸ்தாபனத்தின் சர்வதேச புகைத்தல் தொடர்பான மாநாட்டின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மரணமடைபவர்களில் 70 வீதமானோர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

புதுடில்லியில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்து கொண்ட உலக சுகாதார ஸ்தாபனம், கைத்தொழில் நாடுகளில் புகைத்தலினால் இறப்போர்களின் எண்ணிக்கை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் புகைத்தலால் இறப்போரின் எண்ணிக்கையை விட பன்மடங்கு உயர்வாக இருப்பதால் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அதை தடுப்பதற்கு முன்நின்று உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. [க-14]

## கின்னஸ் சாதனையாளர் இருவர் நேருக்கு நேர் சந்தித்தனர்

இயற்கையின் கொடையால் இரண்டு வேறுபட்ட சிறப்புக்களைப் பெற்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பெயர்களைப் பொறித்துக் கொண்டவர்கள் இருவர் ஒன்றாகச் சந்தித்துக் கொண்டனர்.

உலகின் மூன்றாவது குள்ளர் என்ற சிறப்பினைப் பெறுபவர் தாய்வானைச் சேர்ந்த லிங்யூன்சி, உலகின் முதலாவது அதி உயர்ந்தவர் என்ற சிறப்பைப் பெற்றவர் பாகிஸ்தானைச் சேர்ந்த நஸீர் அகமத் குமுறு.

அண்மையில் பாகிஸ்தானை சேர்ந்த அதி உயர்ந்த மனிதரான நஸீர் தாய்வானுக்கு ஒரு வார விஜயம் ஒன்றினை மேற் கொண்டிருந்தார் அந்த வேளையிலேயே இருவரும் ஒன்றாகச் சந்தித்து பேசிக் கொண்டனர். [09]

## மகாராணி சவூதி விஜயம்

(லண்டன்)

பிரிட்டனின் எலிஸபெத் மகாராணி இவ்வருடம் மார்ச் மாதம் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளர். (க-14)

## பீகாரில் ஏற்பட்ட ரயில்விபத்து 11 பேர் கொல்லப்பட்டனர்

(இந்தியா)

இந்திய மாநிலமான பீகாரில் ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் பட்னாவிற்கு கிழக்கே உள்ள ஒரு நகரில் நிறுத்தப்பட்டிருந்த ரயிலில் இருந்து இறங்கிய நபர்கள் எதிர் கடவையில் வந்த அதிவேக ரயிலால் மோதப்பட்டார்கள்.

இதே வேளை இந்திய வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடும்குளிரினால் இறந்தவர்கள் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. பீகாரிலும் உத்தரப் பிரதேசத்திலும் 113 பேர் இறந்துள்ளதாக பி. ரி. ஐ. செய்திஸ்தாபனம் தெரிவித்துளள்து.

## இந்திய விமான பயணியிடமிருந்து அமெரிக்க ரக துப்பாக்கி மீட்பு

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில்உள்நாட்டுவிமானத்தில் பயணம் செய்ய இருந்தவரது பெட்டியில் துப்பாக்கி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர் விமானத்தைக் கடத்தும் எண்ணத்துடன்விமானப் பயணத்தை மேற்கொண்டிருக்கலாம் என இந்தியப் பொலிசார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் விக்ரம் ரெட்டி (வயது-28) என்பவரைக் கைது செய்துள்ளனர்.

இப் பிரயாணி அஸாம் மாநில லோசத்தியில் இருந்து கல்கத்தா நோக்கி பயணம் மேற்கொண்டவர் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி அமெரிக்கத் தயாரிப்பாகும் எனத் தெரிய வருகிறது.

விமானத்தைக் கடத்தும் நோக்கமாக பிரஸ்தாப நபர் துப்பாக்கியை வைத்திருக்கலாம் என பொலிசார் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## இந்தியா விமானக் கடத்தலை திரைப்படமாக்க போட்டி

(புதுடில்லி)

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இந்திய பயணிகள் விமான கடத்தலை அடிப்படையாக வைத்து திரைப்படம் ஒன்றை எடுப்பதற்கு இந்திய படத்தயாரிப்பாளர்கள் பலர் போட்டிபோட்டுக் கொண்டிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை சில தயாரிப்பாளர்கள் இத்திரைப்படத்தை தயாரித்து முடிக்கும் தறுவாயில் இருப்பதாயும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-14)

க. பொ. த. உயர்தர மாணவர்கள்

# பாடசாலை நாட்களில் 80வீத நாட்கள் வராவிட்டால் பரீட்சையில் தோற்றமுடியாது

[கொழும்பு]

பாடசாலை நடைபெறும் நாட்களில்80வீதநாட்களுக்கு சமுகமளிக்கத்தவறும் மாணவர்கள் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது என கல்வி உயர்கல்வி அமைச்சர்றிச்சட்பத்திரன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கல்வியமைச்சு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

உயர்வகுப்பில் செய்முறைப் பயிற்சி கருத்திட்டம் போன்றவற்றை நிறைவு செய்யாத மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளிக்கத்தவறும் மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப் படமாட்டாது என்றும் மாணவர் பாடசாலைக்கு சமூகமளிக்காதது பற்றி பெற்றோருக்கு அறியத்தர வேண்டும் என்றும் இத்திட்டம் கடுமையாக அமுல் படுத்தப் படும் எனவும் அமைச்சர் பத்திரன தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

# எம். ஜி. ஆரின் பிறந்ததினத்தை ஒட்டி தமிழகத்தில் மனிதநேய நாள் பிரகடனம்

மறைந்த தமிழக முதல் அமைச்சர் எம். ஜி இராமச்சந்திரனின் 83வது பிறந்த தினத்தை முன்னிட்டு வரும் ஜனவரி 17ம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையான நாட்களை மனிதநேய நாளாக எம். ஜி. ஆர் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினர் பிரகடனப்படுத்தவுள்ளனர்.

மனித நேயத்தின் மறு உருவமாகத் திகழ்ந்து ஏழைகளின் காவல் தெய்வமாக போற்றப்படுகின்ற மறைந்த தமிழக முதல்வரின் பிறந்த நாளை ஒட்டி ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தைச்சேர்ந்த மக்களுக்கு ஏற்ற பல உதவிகளும் வழங்கப்பட இருக்கிறது.

இந்நாட்களில் அறிஞர் அண்ணாவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட கழகக் கொடியை ஊர்கள் தோறும் ஏற்றி இந்நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அன்புடன் கேட்டுள்ளனர்.

## வாழைச்சேனை..,

அமைந்துள்ள சிறிய கடைக்கு அருகில் வைத்து ஜெற்றி இராணுவமுகாம் இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் இவரை கைது செய்தனர் இவருடன் சென்ற உறவினர் ஒருவர் இவர் குறித்து விளக்கிக்கூறி அவரை விடுதலை செய்யுமாறு மன்றாடிக் கேட்டபோதும் அவ் இளைஞனை கைது செய்தார்கள்.

மறுநாள் விஜயராஜாவின் தந்தை குறிப்பிட்ட முகாமில் சென்று விசாரித்தபோது அவரை விசாரித்து விட்டு விடுதலை செய்வதாக கூறிய போதும் பின்பு அவரை தாம் கைது செய்யவில்லை எனக் கைவிரித்தனர்.

இது சம்பந்தமாக பலணுவ முகாம்கள் பொலீஸ் நிலையங்கள் போன்றவற்றிற்கு சென்று விசாரித்த போதும் பலனேதும் கிடைக்கவில்லை.

இது சம்பந்தமாக வாழைச்சேனை காகிதசாலை முகாமில் விசாரித்தபோதும் தாங்கள் கைது செய்யவில்லை என்று கூறிவிட்டனர். இவரின் கைது தொடர்பாக நேரடி சாட்சியங்கள் உள்ளன கடந்த காலங்களில் நடைபெற்றது போல் இவ் இளைஞனும் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போயிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

எனவே மேற்படி இளைஞனின் கைது குறித்து விசாரணை செய்து அவருக்கு என்ன நடந்தது என்பதை அறிய ஆவண செய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## அஞ்சலிக் கூட்டம்

மா்மனிதர் குமார் பொன்னம்பலத்தின் மறைவை ஒட்டி யாழ். பல்கலைக் கழக அனைத்துபீடமாணவர்களும் ஒன்றிணைந்து இன்று காலை 11,00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெறுவதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது. அனைத்துப்பீட மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுள்ளனர்,

## படகு விபத்தில்...

ஆற்றினால் அடித்துச் செல்ப் பட்டார்.

இவருடன் சென்ற இவரது மகனையும் இச்சம்பவத்தின் போது காணவில்லை என்றதும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஆற்றினால் அடித்துச் செல்லப்பட்ட அந்தோணி ஜோசப்பின் சடலம் நேற்று மீட்கப் பட்டதாக தெரிகிறது. ஆற்றில் பலியான பிரஸ்தாப நபர் இளவாலையைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (12-வ)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா ஆசையன்னம்

திருமதி கந்தையா ஆசையன்னம் 10-01-2000 அன்று காலமாகிவிட்டார். இவரது ஈமக்கிரிகைகள் சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

ஞா, ராஜன்

நவாலி.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆம் 11 திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

# வடமராட்சி வடகடல் பிரதேசத்தில் மீன்பிடி தடை நீக்கப்பட்டது

(புலோலி)

கடந்த 7ஆம் திகதி முதல் வரும் 17ஆம் திகதிவரை, வடமராட்சி வடக்கு கடற் பிரதேசத்தில்கடற்தொழிலில் மீனவர்கள் ஈடுபடுவதற்கு இராணுவத்தினரால் விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது.

மீன்பிடித்தடை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த இன்பருட்டி, சுப்பர்மடம், சக்கோட்டை, பொலி கண்டி, வல்வெட்டித்துறை, கெருடாவில், தொண்டமானறு மற்றும் வலி வடக்கில் இருந்து வடமராட்சியில் தங்கி இருக்கும் மயிலிட்டி பலாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களை அழைத்து பருத்தித்துறை இராணுவத்தினர் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைநீக்கப்பட்ட செய்தியை அறிவித்தனர்.

தடைநீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஈ. பி. டி, பி. வடமராட்சி அமைப்பாளர் ,யாழ். அரசாங்க அதிபர், கடற்படை விரிவாக்க அதிகாரி ஆகியோர் இராணுவத்தலைமைப் பீடங்களுடன்ஏற்கனவே தொடர்பு கொண்டிருந்தனர்.

இதேவேளை வடமாட்சி ஈ.பி.டி-பி. அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டமைக்கிணங்க இராணுவ உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நிலைமைகளை விரிவாக விளக்கிய தன் பேரில் இத்தடை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## அனுராதபுரத்தில் 152பேர் கைது

[அனுராதபுரம்]

அநுராதபுரம் பகுதியில் நேற்று 152பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டார்கள்.

நேற்று அதிகாலை அனுராதபுரம் பகுதியை சுற்றி வளைத்த படையினர் சந்தேகத்தின் பேரில் 152பேர்வரை கைது செய்துள்ளார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

## இரு கைதிகள் நிலை மோசம்

[களுந்துறை]

களுத்துறை சிறையில் கைதிகளுக்கும், சிறைக் காவலர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் சந்திரமோகன், பிரபானந்தன் என்ற இரு கைதிகளின் நிலை மோசமடைந்திருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [வ]

## மீன்பிடிக்க அனுமதி

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் கரையோரங்களை அண்டிய பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர அனுமதித்த வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [76 வ]

## முஸ்லீம்...

களப்பில் இடம்பெற்ற வன்செயலின் போது செங்கலடி பதுளை வீதியில் உள்ள றூகம கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த 48 குடும்பங்களே ஏறாவூர் மீச் நகரில் மீளக் குடியமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப் படும் 10 நபர்களை ஏறாவூர் பொலீஸார் தேடுகின்றனர்.

## கொழும்பு...

கள் தாக்குதல் நடத்தவிருப்பது சம்மந்தமாக இரண்டு கிழமைக்கு முன்பே தெரியும் இதனால் தான் அவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கி இருந்தோம்.

குண்டு வெடிப்பு எப்படி நடந்தது என்று தெரியாது நான் கடந்த 5 வருடங்களாக ஜனதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் கடமை ஆற்றுகிறேன் மூன்று வருடமாக அரசியல் முக்கியத்துவத்துக்குபாதுகாப்பு அளிப்பது சம்மந்தமான பயிற்சிபெற்றேன் இது தொடர்பாக அமெரிக்கா சென்று இரண்டு வாரங்கள் பயிற்சி பெற்றேன்

ஒவ்வொருவரையும் நன்கு பரிசோதனை செய்தபின்பே அனுப்பி வைப்போம் என்று தனது சாட்சியத்தின் போது கூறினர்ர். (வ)

## பூரண சுகமடைய பிரார்த்தனை

களுத்துறை சம்பவத்தில் படுகாய முற்று மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட செஞ்சிலுவைசங்கத்தின் முன்னாள் இணைப்பாளர் கி. கில்ஷோர உட்பட மற்றும் அனைவரும் பூரண குணமடைந்து நலத்துடத் குடும்பத்தாருடன் இணைந்திட வேண்டி புளொட் இயக்கத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

## கிளைமோர் செயலிழக்க வைக்கப்பட்டது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் கிழக்கு இலங்கைப் பல்கலைகழகத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் புதைக்கப்பட்டிருந்த கிளைமோர் ரக கண்ணிவெடி ஒன்று படையினரால் கண்டெடுத்துச் செயல் இழக்க வைக்கப்பட்டது.

இக்கண்ணிவெடி சும்ார் 15 கிலோ கிராம் நிறை உடையது என படையினர் கூறியுள்ளனர்,

## இரு இளைஞர்கள் விடுதலை

(புலோலி)

நேற்று முன்தினம் புலோலிப் பகுதியில் உள்ள உபய கதிர்காமம், வல்லிபுரக்குறிச்சிப் பகுதிகளை சுற்றி வளைத்து தேடுதல் நடாத்திய போது இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வமராட்சிகிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து, செம்பியன் பற்று தெற்கு தாளையடியில் வசித்து வந்த கந்தசாமி மதிரூபன், வத்தராயன் தெற்கு தாளையடியில் வசித்து வரும் கந்தசாமி ரவிகாந் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

மேற்படி இளைஞர்களின் பெற்றோர் ஈ. பி. டி. பி. வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரிகேடியருடன் தொடர்பு கொண்டு இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## குண்டுதாரியின் தலை பரிசோதனை

[கொழும்பு]

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து சந்தேகிக்கப்படும் தற்கொலைக் குண்டுதாரீயான பெண்ணின் தலைப் பகுதி இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்ாட்டுள்ளது. [வ]

## துக்கம் அனுஷ்டித்தனர்

கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் சாங்கிரஸ் செயலதிபரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பென்னம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டித்தனர். [22-வ]

## பல்கலைக்கழகத்தில் சுவரொட்டிகள்

குமார் படுகொலையைக் கண்டிக்கும் வகையிலான சுவரெட்டிகளும் பாததைகளும் பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருந்தன. கலை வர்த்தக முகாமைத்துவ விஞ்ஞான பீட மாணவர்களும் ஏனய துறை மாணவர்களும் கறுப்புப்பட்டி அணிந்வாறு வளாகத்துக்கு வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது [22-வ]

## இடம்பெயர் சேவை

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதகல்பகுதியில் பரீட்சார்த்தமாக இடம் பெயர் சேவை ஒன்றினை பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா இன்று காலை ஆரம்பிக்கவுள்ளார்.

முதல்முறையாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இவ் இடம் பெயர் சேவையின் மூலம் மக்களின் அன்றாட தேவைகளை அறிந்து உடனுக்குடன் அரசஅதிபர்களுக்கு அறிவித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-12)

## விசாரணைக்...

வேண்டுமெனவும் பணிக்கப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுவது சம்பந்தமாக கொழும்பு மாவட்ட எம். பி. ஆர். யோகராசனிடம் கோட்டுக்கொண்ட விபரங்களை எழுத்தில் தருமாறு பணிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக யாராவது கைதுசெய்யப் பட்டால் அதுதொடர்பான முறைப் பாட்டு விசாரணை செய்வதற்கு ஒரு குழு நியமிக்க வேண்டுமென்றும் அக்குழுவின் தலைவராக சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் திரு சங்கரை நியமிப்பதெனவும் இதற்கென அவருக்கு ராஜகிரியாவில் உள்ள மொழி அமுலாக்கல் ஆணைக்குழு கட்டிடத்தில் ஒரு இடத்தை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை இம்மாத இறுதிக்குள்விசாரணைக்காக நடத்தி முடிப்பதற்குகான அறிவுறுத்தல்களை பொலீஸ் திணைக்களம் சட்டமா அதிபர் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.